# இன்றையச் சூழலில் சமய நல்லிணக்கம்

**முனைவர் ர.கோரிஜான்**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி,

இளையான்குடி

---

## சமுதாயமும் மனிதனும்

மனித இனம் தோற்றம் பெறத் துவங்கிய காலத்திலிருந்தே சமய நம்பிக்கைகளும் ஏதாவது ஒரு காரணத்தின் அடிப்படையில் மனித வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்தே வந்திருக்கின்றன. இதன் காரணமாக மக்களிடையே நிறுவன அடிப்படையிலான சமய நம்பிக்கைகள் நிரந்தரமான நிலைப்பாட்டினைப் பிற்காலத்தில் ஏற்படுத்திக் கொண்டன. மனிதனுக்கும் மனித சக்திக்கும் மேற்பட்டதாக உள்ள இயற்கை ஆற்றல்களுக்கு இடையேயான தொடர்பு பற்றிய கருத்தாக்கங்கள் மனித சமூகத்தில் படைப்பாற்றல் மிக்க இறைவன் ஒருவன் உள்ளான் என்ற நம்பிக்கையை வலுப்பெறச் செய்தது. இதுவே நிறுவன சமய வரலாற்றின் தொடக்கமாகவும் அமைந்தது.

சமயம் என்பது மனிதனைப் பண்படுத்தும் வழித்தடமாக தோன்றியது. இதன் காரணமாகவே மனிதனை ஒழுங்குபடுத்தி ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவதற்கு சமயம் முயற்சி செய்கிறது. இதன் பயனாகவே மனித சமூகத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே உலகில் பல சமயங்கள் தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன. இவ்வுலகில் சமயங்கள் அனைத்தும் சமய ஒருமைப்பாட்டினையே வலியுறுத்துகின்றன. சமயங்கள் தத்தம் மறைவேதங்களின் வாயிலாக மனிதனை நெறிப்படுத்துகின்றன.

இன்றைய நிலையில் உலகில் மக்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சமயநெறியைப் பின்பற்றுபவர்களாக இருப்பினும் அந்தந்தச் சமயம் எடுத்துக் கூறும் மனித உறவு, மனிதாபிமானம், மனித மேன்மை, மனித நேயம், நல்லிணக்கம் தொடர்பான கருத்துக்களை முழுமையாகத் தெரிந்து கொள்வதில்லை. இதற்குக் காரணம் சமய மறைவேதங்களின் புரிதல் தன்மையில் ஏற்படும் குறைபாடுகளே ஆகும். இதன் விளைவு இன்றயை நிலையில் சமயங்களின் பெயரால் நிகழ்த்தப்படும் வன்முறைகளும் பயங்கரவாதமும் அன்றாட நிகழ்வுகளாக மாறிக் கொண்டிருப்பதை நாம் ஒவ்வொரு நொடிப்பொழுதும் உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

உலகம் எத்தனையோ விஞ்ஞான வளர்ச்சிகளையும், அறிவியல் பூர்வமான சிந்தனைகளையும் இன்றயை நிலையில் பெற்றிருந்தாலும் கூட அமைதி என்னும்

சொல்லாக்கத்தின் உண்மைப் பொருளைத் தம் வாழ்வில் இழந்து தவிக்கிறது. மனித இனம், மனித நம்பிக்கை, உணர்வு, செயல்பாடு ஆகியன ஏதாவது ஒரு விதத்தில் அவரவர் சார்ந்த சமய நம்பிக்கைகளுடன் தொடர்பு கொண்டுள்ளன.

### சமயமும் நல்லிணக்கமும்

மனித சமூகத்தில் மதம், சாதி, சமூக நல்லிணக்கம் நிலவுவதற்கு என்றென்றும் ஒருமைப்பாடும் ஒற்றுமை உணர்வும் அவசியமாகும். மனிதர்களிடையே காணப்படுகின்ற எதிர்பார்க்கப்படுகின்ற ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமை உணர்வினை எந்த அடிப்படையில் உருவாக்கிட முடியும் என்பது இன்றைய நிலையில் கேள்விக்குறியாக உள்ளது. மனித சமூக ஒற்றுமையை நல்லிணக்கத்தைச் சீரழிக்கும் இத்தகு காரணிகள் மனித மனங்களை மதத்தாலும், சாதியாலும், இனத்தாலும், நிறத்தாலும், இடத்தாலும், மொழியாலும் துண்டு துண்டுகளாக்கிச் சிதறடித்துக் கொண்டிருக்கின்றன.

மனிதனுடைய பகுத்தறிவு மேம்பாட்டை விட அவனிடமுள்ள மதம், சாதி, இனம் சார்ந்த வேறுபாட்டுணர்வுகள் மேலோங்கி நின்று ஒருவரை பிறிதொருவரிடமிருந்து பிரித்து சமூகச் சூழலில் நல்லுறவையும், நல்லிணக்கத்தையும் இழக்கச் செய்வதன் மூலமாக வேறுபாட்டு உணர்களை வளர்த்துக் கொண்டிருக்கின்றன.

மனித சமூகத்தின் நல்லிணக்கத்திற்கு எதிராக இருந்து சமூக ஒற்றுமைக்குத் தடையாகவுள்ள இனம் மொழி நிறம் தொடர்பான பாகுபாடுகள் இல்லாத வகையில் இன்றைய சமூக அமைப்பு முறையை உருவாக்கிவிட இயலுமா என்றால் அதுவும் நிச்சயமாக கேள்விக்குரியதாய் அமையும். சமயங்கள் எடுத்துக்கூறும் நல்லிணக்கத்திற்கான, நல்லுறவிற்கான கொள்கைகள் சமூகத்தாரால் பின்பற்றப்பட வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு இஸ்லாம் மார்க்கம் இவ்வுலகத்தில் தோற்றம் பெற்றது. நலிவடைந்த சமூகத்தாரிடையே அதனைக் கொண்டு செல்லும் முகமாக இசுலாம் மார்க்கம் நல்லிணக்கக் கருத்துக்களை உள்ளடக்கியதாகும்.

### காந்தியடிகளின் பல்சமய உறவு

சுதந்திர போராட்டத்தின் போது காந்தியடிகள் விரும்பிய சமயமும் சமய நல்லிணக்கமும் இன்னும் அதன் தேவை குறித்த விழிப்புணர்வு மனிதர்கள் மத்தியில் இன்னும் அதிகம் அதிகமாய் தேவையாய் உள்ளது. சமயங்களுக்கு இடையிலும் சமுதாயங்களுக்கு இடையிலும் நல்லிணக்கச் சூழல் உடனடித் தேவையாக இருக்கிறது. எனவே சமயம் குறித்த காந்தியின் அணுகுமுறை நமக்குப் பல படிப்பினைகளை உணர்த்துகிறது.

இஸ்லாம் மார்க்கம் உணர்த்தும் சகிப்புத் தன்மையை காந்தியடிகள் முழுமையாக ஏற்றுக் கொண்டார். அவரது அஹிம்சை உணர்வு அதனை வெளிப்படுத்துகிறது. அதோடு அவர் நின்றுவிடவில்லை. அதைவிட ஆழமான, அனுபவ அடிப்படையிலான நேசமும் புரிந்துணர்வும் கொண்டவராக இருந்திருக்கிறார்.

இஸ்லாமியர் விசயத்தில் காந்தி சகிப்புத் தன்மையோடு நின்றுவிடவில்லை. அதை விட ஆழமான, அனுபவ அடிப்படையிலான நேசமும் புரிந்துணர்வும் கொண்டவராக இருந்திருக்கிறார். ‘பிற சமயங்களைச் சகித்துக் கொள்ளக் கற்றுக் கொண்டால் மட்டும் போதாது’ நம் சமயம் போன்றே அவற்றையும் நாம் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் இவ்வுலகில் நிலையான அமைதி நிலவும். மானுடத்தின் வெவ்வேறு வழிகாட்டிகளின் வார்த்தைகளை பக்தியுடன் அறிந்துகொள்வது என்பது அத்திசையில் சரியான நடவடிக்கையாக இருக்கும் என்று Saying of (Prophet) Mohamed என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பிற சமயங்களைப் பற்றி அறிந்து கொண்டால் மட்டும் போதாது. பிற சமயங்களைச் சேர்ந்தவர்களின் ஆன்மீக சாதனைகளில் நம்மால் பங்கேற்க இயலவேண்டும். அப்போது தான் சமயங்களிடையே நல்லிணக்கம் உருவாகும் என்று தான் காந்தியின் சொற்கள் பொருள்படுகின்றன. இப்படிப்பட்ட ஒரு பரவலான ஆன்மீக அடிப்படையிலான பங்கேற்பே பல்வகைப்பட்ட மக்களிடையே நல்லெண்ணத்தின் அடிப்படையிலான ஒற்றுமையை உருவாக்கும்.

‘மார்கரெட் சர்ட்டர்ஜி’ பல சமயங்களைக் கொண்ட சமுதாயத்தில் நேய உணர்வுடன் பங்கேற்கும் மனித வாழ்வு முறையே சமயம் சார்ந்த வாழ்வுமுறை. இங்கு அகிம்சை முறையிலும் நியாயமான சமுதாயத்தை உருவாக்கப் போராட்டம் நடக்கிறது. இதுவே வெவ்வேறு நேரடியாக சேர்ந்த பல்வகைச் சமயங்களைத் தோற்றுவித்தவர்களின் நோக்கங்களுக்கு பொறுத்தமாக இருக்கும். இப்படிப்பட்ட ஒரு சமயத்தை முன்னிறுத்தும் போது மனிதர்களைப் பிரிக்கும் சித்தாந்தங்களுக்கும் புற வழிபாட்டுச் சடங்குகளுக்கும் வேலையில்லாமல் போகிறது. சமய வழிபாட்டின் மையம் தனிப்பட்ட பக்தியுணர்விலும் நேர்மையான நடத்தையிலுமே காணப்படுகிறது. காந்தியின் சமயமும் அதுவாகவே இருக்கிறது.

காந்தியின் பார்வையில் சமய வாழ்க்கை ‘எந்த ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் தோற்றம் அளித்து அவனுக்குத் தெளிவூட்டும் காட்சிகளைக் கொண்டதாக இருக்கிறது’ என்று எழுதுகிறார் லா மக்டோனோ. குறிப்பிட்ட ஒரு சூழலில் திசையும் நோக்கமும் அளிக்கும் கிரியா ஊக்கிகள் என்ற அளவில் சமயச் சின்னங்கள் செயல்படுகின்றன. எனவே காந்தியின் சமயநோக்கு நடைமுறைப் பயனை முன்னிட்ட ஒன்று

வேலை செய்தால் சரி செய்யவில்லை என்றால் சரி விட்டுவிடலாம் என்ற அவரது லௌகீக அணுகுமுறை போலவே ஆன்மீக அணுகலும் இருந்தது. எனவே, காந்தி இந்து மற்றும் இசுலாமிய குறியீட்டு மொழியைக் குறிப்பிட்ட ஒரு போராட்டத்தின் அவசியத்தை உணர்த்தி அதில் மக்களை ஈடுபடுத்தவே பயன்படுத்தினார்.

காந்தி தன் இளம்பருவத்தில் ஷிப்லி நூமானியின் இசுலாமிய சமய சீர்திருத்த எழுத்தைத் தீவிரமாக வாசித்தவர். இந்தியாவில் உள்ள இசுலாமியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்ற அவரது எழுத்து காலிப் உமர், அபு ஹனீபா முதலானவர்களை, பக்தியும் படைப்பூக்கமும் கலந்து, புதிய சூழலுக்கான புதிய வழிகளைக் கண்டவர்கள் என்று போற்றியது. அல் கசாலி போன்றே காந்தியும் புறப்பார்வையில் ஆன்மீகவாதிகளாக தோற்றம் தந்தவர்களும் சீரழிவுக்கும் வன்முறைக்கும் பலியாகக் கூடியவர்களாக இருந்ததைக் கண்டு வருந்தினார். இதையே 'பரவலான சமூக அமைப்பில் ஆரோக்கியமான, நியாயமான மறுமலர்ச்சியை உருவாக்க தனிமனிதனின் சமய ஒழுக்கம் அடிப்படைத் தேவையாக இருக்கிறது என்பதை அல்கசாலியும் காந்தியும் உணர்ந்திருந்தார்கள்' என்று எழுதுகிறார் மக்டோனா.

காந்தியின் பார்வையும் செயல்பாடும் இந்தியாவுக்கும் அப்பால் உலக முக்கியத்துவம் கொண்டவை. நவீன அரசியல் மற்றும் நவீன லிபரல் அரசுகளின் இயங்குதலைப் புரிந்துகொள்ள காந்தியம் உதவுகிறது.

வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்த மக்களிடையே இதய ஒருமைப்பாட்டை அடிமட்ட அளவில் உருவாக்க முயன்றார். இசுலாம் பொய்யான சமயமல்ல. இந்துக்கள் அதை பக்தியுடன் பயிலட்டும் என்னைப் போலவே அவர்களும் அதை நேசிப்பர்.....

தன் இறுதி உண்ணா நோன்புக்குப் பின்னும் அனைத்து சமயங்களையும் கற்று அவற்றை சம அளவில் மதிக்க வேண்டும் என்று தன் தொண்டர்களுக்கு அவர் வலியுறுத்தினார். தன்னைப் போலவே எல்லாரும், அனைவரிடமும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார். சமய வேறுபாடுகளை மறந்து அமைதியாக, நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்று வலியுறுத்தி நல்லிணக்கத்திற்கு வித்திட்டார்.

## நிறைவாக

உலகமயமாக்கப்பட்ட இன்றையச் சூழலில் மக்களிடையே கூட்டுறவும் இதய - அறிவு ஒருமைப்பாடும் முக்கியமாக உள்ளன. Clash of Civilisations என்று கூறப்படும் சமய இன மோதல்கள் நிறைந்த இன்றைய உலகில் உலகளாவிய அமைப்புகளும் விழுமியங்களும் வலுவாக்கப்பட வேண்டும். சமயங்கள் மற்றும் பண்பாடுகளிடையே நல்லிணக்கம் உருவாக வேண்டும்.